සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / **இலங்கை பரீட்சைத் திணைக்களம்** / Department of Examinations, Sri Lanka

# இலங்கை சட்டக் கல்லூரி நுழைவுப் பரீட்சை - 2021

# Sri Lanka Law College Entrance Examination - 2021

## (01) மொழித் திறன்கள்


## Language Skills

*மூன்று மணித்தியாலங்கள்*
*Three hours*

### பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்

**மிக முக்கியம் :**

விடை எழுதுவதற்கு பென்சிலைப் பயன்படுத்த வேண்டாம்.



※ **விடை எழுதும்போது பின்வருமாறு இலக்கங்களை எழுதுமாறு அறிவுறுத்தப்படுகின்றீர்கள்.**

**0 1 2 3 4 5 6 7 8 9**

உமது சுட்டெண்ணை இங்கேயும் மூன்றாம் மற்றும் ஐந்தாம் பக்கங்களிலுமுள்ள புள்ளிக்கோட்டின் மீதும் எழுதுக.

....................................

பரீட்சைச் சுட்டெண் சரியானது என உறுதிப்படுத்துகின்றேன்.

....................................
நோக்குநரின் சிற்றொப்பம்

**முக்கியம்**

※ இவ்வினாத்தாள் **11** பக்கங்களில் **38** வினாக்களைக் கொண்டுள்ளது.

※ **எல்லா** வினாக்களுக்கும் விடைகளை **இத்தாளிலேயே** எழுதுக.

※ **உமக்குத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கேற்ப விடைகளை எழுதுக. அறிவுறுத்தல்களுக்கு அமையாத விடைகளுக்குப் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.**

※ விடைகள் தரப்படாவிட்டாலும் இவ்வினாத்தாளை மேற்பார்வையாளரிடம் கையளிக்க வேண்டும்

※ **கறுப்பு** அல்லது **நீல** நிறப் பேனையினால் மாத்திரம் தெளிவாக விடைகளை எழுதுக. **பென்சிலைப் பயன்படுத்த வேண்டாம்.**

※ இவ்வினாத்தாளைப் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லல், அதனை புகைப்படம், நிழற்பிரதி (photocopy) எடுத்தல் என்பன குற்றமாகும்.

※ **தெளிவற்ற இலக்கம், தெளிவற்ற கையெழுத்துகள், அழிக்கும் வெண்மைப் பயன்பாடு, பென்சிலைப் பயன்படுத்தி எழுதப்பட்ட விடைகள் ஆகியவற்றைக் கொண்டுள்ள விடைத்தாள் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்படமாட்டாது.**

**பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்**

| பக்க எண் | வினா எண் | பெற்ற புள்ளிகள் |
|---|---|---|
| 2 | 1 - 10 | |
| 3 | 11 - 20 | |
| 4 | 21 - 32 | |
| 5 | 33 - 35 | |
| 5 - 7 | 36 | |
| 8 | 37 | |
| 9 - 11 | 38 | |
| மொத்தம் | | |

**இறுதிப்புள்ளிகள்**

| | |
|---|---|
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |

| | | |
|---|---|---|
| விடைத்தாளை | புள்ளியிட்டவர் | |
| | பரீட்சித்தவர் | |
| | | |
| பிரதம பரீட்சகர் | | |

[பக். 2 ஐப் பார்க்க

● **1** தொடக்கம் **3** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் தரப்பட்டுள்ள சொற்களுள் ஒரு சொல் பிழையாக எழுதப்பட்டுள்ளது. அச்சொல்லைத் தெரிவுசெய்து அதன் **இலக்கத்தை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

(*03 புள்ளிகள்*)

1. (1) சங்கமம் (2) புரோகிதர் (3) குதர்க்கம் (4) அமச்சர் (………)

2. (1) நெய்தல் (2) நெறிபிறள்வு (3) நேத்திரம் (4) நேர்திறம் (………)

3. (1) பன்னுதல் (2) பழம்பொருள் (3) பிறதியுபகாரம் (4) பாசறை (………)

● **4** தொடக்கம் **6** வரையிலான ஒவ்வொரு வினாவிலும் தரப்பட்டுள்ள சொற்களின் அகராதி வரிசையை மிகச்சரியாகக் காட்டிநிற்கும் விடையைத் தெரிவுசெய்து அதன் **இலக்கத்தை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின்மீது** எழுதுக.

(*03 புள்ளிகள்*)

4. (அ) அதிகாரம் (ஆ) அண்மை (இ) அடக்கம் (ஈ) அபசாரம்
(1) ஆ, ஈ, அ, இ (2) அ, இ, ஆ, ஈ (3) இ, ஆ, அ, ஈ (4) இ, ஈ, ஆ, அ (………)

5. (அ) நலம் (ஆ) சத்திரம் (இ) சித்திரம் (ஈ) சுகம்
(1) ஆ, இ, ஈ, அ (2) ஈ, இ, ஆ, அ (3) அ, இ, ஆ, ஈ (4) ஆ, ஈ, இ, அ (………)

6. (அ) படிப்பு (ஆ) கதாபாத்திரம் (இ) ஞானம் (ஈ) கத்தி
(1) ஆ, ஈ, இ, அ (2) இ, ஈ, ஆ, அ (3) இ, ஈ, ஆ, அ (4) ஈ, ஆ, இ, அ (………)

● **7** தொடக்கம் **9** வரையிலான ஒவ்வொரு வினாவிலும் ஒவ்வொரு சொல்லும் அதற்கு எதிரே உள்ள அடைப்புக்குறியினுள் அது பிரித்து எழுதப்பட்டுள்ள விதமும் காட்டப்பட்டுள்ளது. அவற்றுள் ஒன்று பிழையான வகையில் அமைந்துள்ளது. அதன் **இலக்கத்தை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின்மீது** எழுதுக.

(*03 புள்ளிகள்*)

7. (1) புளியம்பழம் (புளி + அம் + பழம்)
(2) தமிழ்ச்சொற்கள் (தமிழ் + சொல் + கள்)
(3) ஊர்காவற்படை (ஊர் + காவல் + படை)
(4) முழுநிலாநாள் (முழு + நிலவு + நாள்) (………)

8. (1) பாலும்பழமும் (பால் + உம் + பழம் + உம்)
(2) ஊருக்கு (ஊர் + உ + கு)
(3) ஊர்ச்சந்தை (ஊர் + ச் + சந்தை)
(4) யாழிசை (யாழ் + இசை) (………)

9. (1) மாலைக்காலம் (மாலை + காலம்)
(2) சேலைத்தலைப்பு (சேலை + தலைப்பு)
(3) மூலைமுடுக்கு (மூலை + முடுக்கு)
(4) பாலைக்காய்ச்சு (பாலை + காய்ச்சு) (………)

● **10** ஆம் வினாவிற்குரிய சரியான விடையைத் தெரிவுசெய்து அத்தெரிவினது **இலக்கத்தை** வினாவிற்கு எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக. (*01 புள்ளிகள்*)

10. பின்வருவனவற்றுள் அர்த்தமுள்ள சொல்லை உருவாக்குவதற்கு ஏற்ற எழுத்துக்களின் கூட்டம் யாது?
(1) கைத்தவாழ்ரம் (2) வாதாவாழ்ரம்
(3) செலகைச்க்ழ்வு (4) இவாழ்வசியம்க் (………)

[பக். 3 ஐப் பார்க்க

சுட்டெண் :..............................

● **11** தொடக்கம் **15** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் தரப்பட்டுள்ள வாக்கியங்கள் பிழையாயின் அவற்றைத் திருத்தி முழு வாக்கியத்தையும் வினாவின் கீழே தரப்பட்டுள்ள **புள்ளிக்கோட்டின்மீது** மீண்டும் எழுதுக. வாக்கியம் சரியாயின் '**சரி**' என்று மட்டும் **புள்ளிக்கோட்டின்மீது** எழுதுக.

(*05 புள்ளிகள்*)

11. திருடன் பெட்டியைத் துறந்து பணத்தைத் திருடினான்.

..........................................................................................

..........................................................................................

12. என்னை ஏன் அடித்தாய் என்று சற்று ஆத்திரமுடன் கேட்டான்.

..........................................................................................

..........................................................................................

13. நாங்கள் தினமும் காலையிலே பற்களைத் துலக்குவோம்.

..........................................................................................

..........................................................................................

14. அந்தக் கட்டடங்கள் பார்வைக்குச் சிறியதாய் தோன்றின.

..........................................................................................

..........................................................................................

15. அவன் தினந்தோறும் ஆண்டவனை வழிப்படுவான்.

..........................................................................................

..........................................................................................

● **16** தொடக்கம் **20** வரையுள்ள வினாக்களில் தரப்பட்டுள்ள சொற்கள் / தொடர்களுள் ஒன்று மாத்திரம் தனித்து நிற்கிறது. அதனை இனங்கண்டு அதன் **இலக்கத்தை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின்மீது** எழுதுக.

(*05 புள்ளிகள்*)

16. (1) ஆள்தல் (2) பணிதல் (3) தாழ்தல் (4) அடங்குதல் (.........)

17. (1) இன்பதுன்பம் (2) அல்லும்பகலும் (3) ஆதியந்தம் (4) சூதுவாது (.........)

18. (1) அறம் (2) பொருள் (3) தனம் (4) இன்பம் (.........)

19. (1) அட்டாலும் பால் சுவையிற் குன்றாது.
(2) அடிமேல் அடியடித்தால் அம்மியும் நகரும்
(3) எறும்பூரக் கற்குழியும்
(4) முயற்சி திருவினையாக்கும் (.........)

20. (1) சிறுகதை (2) கவிதை (3) நாவல் (4) நாடகம் (.........)

[பக். 4 ஐப் பார்க்க

- **21** தொடக்கம் **25** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் ஆரம்பத்தில் தரப்பட்டுள்ள **தடித்த எழுத்துக்களாலான சொல்லோடு பொருந்தாத** சொல்லைத் தெரிவுசெய்து அதன் **இலக்கத்தை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின்மீது** எழுதுக.

(*05 புள்ளிகள்*)

21. **இரவு**
(1) அல் (2) நிசி (3) வைகறை (4) கங்குல் (………)

22. **தொழில்**
(1) விவசாயம் (2) வாசிப்பு (3) வர்த்தகம் (4) தையல் (………)

23. **பாதை**
(1) ஆறு (2) ஒழுக்கம் (3) நெறி (4) வழி (………)

24. **இசை**
(1) இராகம் (2) பொருள் (3) தாளம் (4) சுருதி (………)

25. **பாடசாலை**
(1) ஆசிரியர் (2) மாணவர் (3) பெற்றோர் (4) அதிபர் (………)

- **26** தொடக்கம் **30** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் தரப்பட்டுள்ள தொடர்மொழிகளுக்குப் பொருத்தமான ஒரு சொல்லைத் தெரிவுசெய்து அதன் **இலக்கத்தை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின்மீது** எழுதுக.

(*05 புள்ளிகள்*)

26. வாழ்நாள் முழுவதும் திருமணம் செய்யாது வாழ்பவன்
(1) தபுதாரன் (2) பிரமச்சாரி (3) சன்னியாசி (4) நைட்டிகன் (………)

27. அரசாங்கம், குறித்த காலப்பகுதியில் தான் எடுத்த தீர்மானம் முதலானவற்றை வெளியிடும் பத்திரிகை
(1) வெள்ளையறிக்கை (2) வர்த்தமானி
(3) தினசரி (4) மாதாந்திரிகை (………)

28. முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் ஆகியவை
(1) நற்றிணை (2) நானிலம் (3) நாதேயம் (4) நாற்பொருள் (………)

29. வெளிப்படையாகப் புகழ்ச்சியாகவும் மறை பொருளிற் பழிப்பும் தோன்றப் பேசும் பேச்சு
(1) சிலேடை (2) வஞ்சப்புகழ்ச்சி (3) மறைமொழி (4) இடக்கரடக்கல் (………)

30. புதிதாகச் செய்த கப்பல், தேர், வண்டி போன்றவற்றை முதன் முதலாக ஓட்டிப் பார்ப்பது
(1) வெள்ளோட்டம் (2) ஒத்திகை (3) பரீட்சார்த்தம் (4) அரங்கேற்றம் (………)

- **31** தொடக்கம் **35** வரையிலான ஒவ்வொரு வினாவிலும் ஆரம்பத்தில் தடித்த எழுத்துக்களால் தரப்பட்டுள்ள பழமொழி / மரபுத்தொடர் ஒவ்வொன்றினதும் கருத்தினைத் தரும் விடையினைத் தெரிவுசெய்து, அதன் **இலக்கத்தை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின்மீது** எழுதுக.

(*10 புள்ளிகள்*)

31. **இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை**
(1) பேராசை
(2) அடுத்தவரிடத்துப் பொறாமை
(3) திருப்திகொள்ளா மனம்
(4) மாடு புல்லை நோக்கி ஓடும் (………)

32. **எறும்பூரக் கற்குழியும்**
(1) விடாமுயற்சி
(2) எறும்புகள் ஊரக் கல் தேயும்
(3) பயனற்ற செயல்
(4) கல்லின் கடினம் எறும்புக்குத் தெரியாது (………)

[பக். 5 ஐப் பார்க்க

33. **குடிப்பது கூழ் கொப்பளிப்பது பன்னீர்**
(1) ஏழையானாலும் சுத்தமாக இருக்க வேண்டும்.
(2) எளிமையே அழகு தருவதாகும்.
(3) வீண் பெருமை
(4) இருக்கும் செல்வத்தை வீணாக்கலாகாது (.........)

34. **அறைகூவுதல்**
(1) பேரம் பேசுதல்
(2) போருக்கு அழைத்தல்
(3) அறைக்கதவைத் தட்டுதல்
(4) கோஷமிடுதல் (.........)

35. **ஆகாயத் தாமரை**
(1) ஆகாய விமானம்
(2) எட்டிப்பிடிக்க இயலாதது
(3) அழகு மிகுந்தது
(4) இல்லாத ஒன்று (.........)

36. பின்வரும் உரைப்பகுதியை நன்கு வாசித்து, அதன்கீழ்த் தரப்பட்டுள்ள ஒவ்வொரு கூற்றும்
சரியானதென்றால் 1 எனவும்
பிழையானதென்றால் 2 எனவும்
ஐயத்துக்கிடமானதாயின் 3 எனவும்
மட்டும் அந்த கூற்றுகளுக்கு எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக. (01 × 20 = 20 *புள்ளிகள்*)

இந்தியர் வியக்கத்தக்கவாறு சட்டத்துக்கமைந்தொழுகுந் தன்மையுடையவரென்றும், குற்றங்கள் அங்கே மிக அருமையாகவே காணப்பட்டனவென்றும் மெகாத் தெனீசு கூறுகின்றார். பாகியனும் இடைக்கால அராபிய யாத்திரிகரும் இவ்வாறே சான்று பகர்கின்றனர். ஆயின் உவான்சாங்கு சற்று மாறான விவரந் தருகின்றார். அவர் கூறுவது இந்தியருக்கு அத்துணைச் சிறப்புத் தருவதாயில்லை. எனினும் வெளிநாட்டு யாத்திரிகர் கொண்ட கருத்துக்களெல்லாம் இந்திய வரலாற்று மூலங்களால் முற்றாக உறுதிப்படுத்தப்படவில்லை. அந்நூல்கள் பலவற்றின் அடிப்படையிலே, மக்களின் உயிருக்கும் உடைமைக்கும் ஏமமில்லையென்ற பெருங் கவலையொன்று காணப்படுகின்றது.

மோரியர் காலம் போன்ற அத்துணைப் பழங்காலத்திலேயே பெரும்பாலான ஊர்களில் அளவுக்கதிகமான குடிகள் வாழ்ந்துவந்தன. இன்று போலவே அன்றும் ஏழை மக்கள் பலர் நாட்டுப்புறங்களிலிருந்தும் குன்றுகளிலிருந்தும் குடிபெயர்ந்து நகரங்களிற் சென்றுறைந்தனர். அவ்வாறு சென்றவர் தமது பழைய சூழலிலும் பார்க்க அங்கே வாழ்க்கை இடர்மிக்கதாயிருக்கக் கண்டனர். இடம்பெயர்ந்து நல்வாய்ப்பிலாது நலிவுற்ற இம்மக்களிற் சிலர் திருந்தாக் குற்றவாளிகளாய் மாறிச் சமூகத்தின் கடைவகுப்பினராய் அமைந்தனர். பண்டை இந்திய நகரங்கள் எல்லாவற்றிலும் இவ்வகுப்பினர் இருந்தவராகவே தோன்றுகின்றனர்.

நகரங்களிற் போலவே நாட்டுப் புறங்களிலும் குற்றங்கள் பெருகிக் காணப்பட்டன. இங்கே பெருங் கொள்ளைக் கூட்டங்கள் இருந்தமைக்குப் புத்தர் காலமுதற் தோன்றிய நூல்கள் சான்று பகர்கின்றன. பரம்பரையான கொள்ளைக் கூட்டத்தாரைப் பற்றிய மிக முற்பட்ட செய்தியே உவான் சாங்கு என்பவர் எமக்குத் தந்துள்ளார். இக்கொள்ளைக் கூட்டத்தார் இந்தியாவிற் பிற்காலத்தில் தோன்றிய கண்டகர் போன்று தம் கைப்பட்டோரின் பொருளை பறிப்பதோடமையாது, ஒரு சமயக் கடமையாக அவர்களைக் கொலை செய்தும் வந்தனர். வணிகர் சாத்துக்கள் பெரும் காவலுடனே இயங்கின. அவ்வாறிருந்தும் ஆறலை கள்வர் அவ்வணிகர் கொண்டு சென்ற பொருள்களை அடிக்கடி கொள்ளையடித்துச் சென்றனர். பண்டைய இந்திய மன்னரில் தலைசிறந்து விளங்கியோர் குற்றம் கடிந்து குடியோம்பும் ஆற்றல் பெற்றிருந்தனரென வெளிநாட்டு யாத்திரிகர் கூறும் சான்றுகளினால் அறிகின்றோமாயின், பண்டைய இந்தியாவிற் குற்றங்களை எதிர்த்து ஒடுக்குவது மிகவும் பெரியதோர் பிரச்சினையாகவே இருந்தது. உள்ளூர் உத்தியோகத்தரும் தண்ட நாயகரும் போர்மறவருமாகப் பணியாளர் பலர் இருந்தனர். அன்றியும் மறையொற்றாரும் பலரிருந்து உளவறிவோராய்ப் பணியாற்றினர். நகரங்களிலும் ஊர்களிலும் காவற்காரர் இரவு முழுவதும் காவல் புரிந்தனர்.

பழைய தரும சூத்திரங்கள் குறிப்பிடும் சிறிய இராச்சியங்களில் எல்லாவித நீதிக்கும் அரசனே ஊற்றாக விளங்கியிருப்பான். அன்றியும் குற்றவாளிகளெனக் கண்ட கள்வரை தனது தண்டினாற் சாடித், தான் வழங்கும் நீதியைத் தானே உண்மையில் நிறைவேற்றியுமிருப்பான். ஆயின், நீதி நிருவாகம் பொதுவாக அறங்கூறவையம் போன்றே நீதிமன்றங்களுக்கு கையளிக்கப்பட்டிருந்தது. அரசவையானது மேன்முறையீடுகளுக்கும் அரசினுக்கெதிராக இழைத்த பாரதூரமான குற்றங்களுக்குமே ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தது.

[பக். 6 ஐப் பார்க்க

அறங்கூறவையங்களின் அமைப்பானது காலம், இடம் என்னுமிரண்டிற்குந் தக வேறுபட்டது. ஆயின் பண்டை இந்தியா தனியொரு நீதிபதியிலும் நியாயாதிகாரிகள் சிலரடங்கிய ஒரு குழுவினையே விரும்பிற்று என்பதை வரலாற்றுச் சான்றுகள் காட்டுகின்றன. சாதகக் கதையொன்று ஐவர் நியாயாதிகாரிகள் அடங்கிய குழுவொன்றைக் குறிப்பிடுவதோடு, அவ்வனைவரும் நேர்மையற்றவராய் இருந்தனரென்றும் கூறுகின்றது. ஆயின் அர்த்தசாத்திரமோ மூவர் நியாயாதிகாரிகள் அமர்ந்து முறை வழங்கும் நீதிமன்றம் பத்து ஊர்களுக்கு ஒன்றாக நிறுவப்படல் வேண்டும் என்றும் மாவட்டங்களிலும் மாகாணங்களிலும் உயர் மன்றங்கள் நிறுவப்பட வேண்டும் என்றும் அறிவுரை கூறுகின்றது. மனுநீதிநூல் பிராட்டுவிவாகனும் அவனிற் குறைந்த பதவியிலுள்ள நீதிபதிகள் மூவருஞ் சேர்ந்து நீதிவிசாரணைக் குழுவாக அமையற் பாலரெனக் கூறுகின்றது.

நீதிமுறை ஊழல் என்பது அடிக்கடி நூல்களிற் குறிப்பிடப்பட்டிருப்பினும் நீதிபதிகளுக்கும் நியாயாதிகாரிகளுக்கும் வகுக்கப்பட்ட ஒழுக்க வரம்புகளோ மிக உயர்ந்தவையாயுள்ளன. அவர்கள் கல்வி கேள்விகளில் வல்லவராயும், சமயவொழுக்கந் தழுவியவராயும், வெகுளியில்லாதவராயும், மனிதவாற்றலுக்கு இயன்றவரை நடுநிலைமை மேற்கொள்பவராகவும் இருத்தல் வேண்டும். கையூட்டுப் பெறும் ஊழலைத் தடுப்பதன் பொருட்டு, வழக்குத் தீர்க்கப்படும் வரை, நீதிபதிகளும் வழக்காடுவோரும் ஒருவரையொருவர் தனிமையிற் கண்டு உரையாடுவதற்கு வாய்ப்பிருத்தலாகாதென ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. அன்றியும், ஏவன்முகர் வாயிலாகக் காலத்துக்கு காலம் நீதிபதிகளின் நேர்மையைப் பரீட்சித்துப் பார்த்தலும் வேண்டுமென அர்த்தசாத்திரம் அறிவுறுத்துகின்றது. நீதிபதியொருவன் கையூட்டுப் பெற்றானெனக் காணப்பட்டவிடத்து அவனுடைய உடைமைகளையெல்லாம் பறிமுதல் செய்து அவனை நாடுகடத்திவிடல் வேண்டுமென விட்டுணுமிருதி விதிக்கின்றது. அறநூற் கருத்துப்படி இதுவே பார்ப்பானொருவன் எய்தற்பாலதாய அறக்கொடுந் தண்டனையாகும்.

பொய்க்கரி போதல் பொதுவாக மிக இழிதகவுடைய செயலாகக் கருதப்பட்டது. பொய்க்கரி போவோன் இம்மையில் அரசனளிக்கும் பல்வேறு தண்டனைகளுக்கு ஆளாவதோடு, மறுமையில் அல்லல் தரும் பிறவிகள் ஒருநூறெய்தியும் அழுந்துவான். பாரதூரமான குற்ற வழக்கிற் பல்லாற்றானும் பெறப்படும் சான்றுகள் ஏற்றுக் கொள்ளப்படும். ஆயின் குடியியற் சட்டத்தை எடுத்துக்கொண்டாற் குறிப்பிட்ட சிலரே சான்று கூறத் தகுதியுடையவராவர். பொதுவாகப் பண்டிதர், கற்றறிந்த பார்ப்பனர் அரசாங்க ஊழியர், குற்றகவையோர், கடன்பட்டோர், ஊரறியக் குற்றம் புரிந்தொழுகுவோர், உறுப்புக் குறைபாடுடையோர் என்னும் இத்தகையோர் சான்று கூறின், அது வலியுடையதாகாது. சாட்சிகள் உண்மை கூறுகின்றனவாவென்று காண்பதற்குப் பல சோதனைகள் விதிக்கப்பட்டுள்ளன. அவற்றில் சில உளவியற்படி மிகத் திட்பமானவை.

குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவன் குற்றவாளியென்னுமளவுக்குத் தேறப்படாமற் பெரிதும் ஐயத்துக்குரியவனாய் இருக்குமிடத்து, அவனிடமிருந்து உண்மையை அறிவதற்காக அவனைச் சித்திரவதைக்குள்ளாக்கலாம். இதன் பொருட்டுக் கூறப்பட்டுள்ள சித்திரவதை முறைகள் எல்லாமே மிகக் கொடுமையானவையல்ல. அவற்றில் பல வகையான கசையடிகள் இடம்பெற்றுள்ளன. பார்ப்பனர், பாலர், முதியோர், பிணியுற்றோர், பித்தர், சூல்கொண்ட மகளிர் என்னுமிவர் கொள்கையளவிற் சித்திரவதைக்கு விலக்கானவர். பெண்டிர்க்கு மென்மையான சித்திரவதையே விதிக்கப்பட்டுள்ளது.

குற்றத்தை துணிவதற்குக் கையாளப்பட்ட மற்றொரு முறை கடுஞ்சோதனையாகும். இது குடியியல் வழக்குக்கும் குற்றவியல் வழக்குக்கும் ஒப்பப் பயன்படுத்தப்பட்டது. இன்றும் இந்தியாவில் நீதிமன்றத்துக்குப் போகாமற் பிணக்குகளைத் தீர்ப்பதற்குச் சிலவகைக் கடுஞ்சோதனைகள் ஒரோவொருகால் மேற்கொள்ளப்படுகின்றன. பழைய நூல்களில் இக் கடுஞ்சோதனை பற்றிய குறிப்புகள் அதிகங் காணப்படவில்லை. ஆயின் பிந்திய காலங்களில் இது பெருவழக்குப் பெற்றுள்ளது. மிருதி நூலாசிரியன்மார், கடுஞ் சோதனைகளில் நம்பிக்கை கொண்டிலரென்பது இதனாற் பெறப்படுகின்றது. அவர் இரு திறத்திலும் உறுதியான சான்றில்லா வழக்குகளுக்கு மட்டுமே அவற்றின் பிரயோகத்தை வரையறை செய்துள்ளனர். எனினும் பலவகையான கடுஞ்சோதனைகள் கூறப்பட்டுள்ளன. காய்ச்சிய இரும்பினைக் கையிலேந்தலும் கொதிக்கும் எண்ணெயிற் கை தோய்த்தலும் அவற்றுள் அடங்கும். இவை இடைக்கால ஐரோப்பாவில் வழங்கியவற்றோடு ஒத்தவனாயிருப்பதால், மிகப் பழங்காலத்திலே இருசாராருக்கும் பொதுவான இந்தோவைரோப்பியரிடங் காணப்பட்ட வழக்கங்களேயெனக் கருத இடமுண்டு. இவற்றுள் ஏர்க்கொழுச் சோதனை சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. இச்சோதனையிற் குற்றஞ்சாட்டப்பட்டவன் பழுக்கக் காய்ச்சிய இரும்புக் கொழுவைத் தனது நாக்கினால் தீண்டுதல் வேண்டும். நாக்குத் தீயாதிருந்தால் அவன் குற்றமற்றவனெனக் கொள்ளப்படுவான். அவனுடைய மனசாட்சி குற்றமுடையதாயிருந்தால் உமிழ்நீர்ச் சுரப்பிகள் செவ்வையாகத் தொழிற்படாது போக, நாக்குத் தீய்ந்து விடும். ஆதலால் விளைவு குறித்து அவன் கொள்ளும் மனவுறுதியைப் பரீட்சிப்பதற்கு உளவியல் முறைப்படி இஃதோர் திட்பமான சோதனையாகும்.

நீதிநூலறிந்த பார்ப்பனர் பலர் அன்று இருந்தாரேனும், அவர் மன்றாடுவதைத் தொழிலாகக் கொண்டவோர் வகுப்பினராக ஒருபோதும் அமைந்திருந்தாரல்லர். நீதிபதிகளாகக் கடமையாற்றாதவர் தமது அறிவைப் பயன்படுத்தி நீதிமன்றங்களுக்குப் புறம்பே வழக்குகளைத் தீர்த்திருப்பாரென நம்பலாம். எனினும், நாம் எடுத்துக்கொண்ட காலப்பகுதியின் முடிவில், இன்று நாம் கருதும் பொருளில் நியாயவாதியர் என ஒரு வகுப்பாரே தோன்றிவரலாயினரென்பதற்குச் சான்றுண்டு.

[பக். 7 ஐப் பார்க்க

(i) குடியியல் என்றும் குற்றவியல் என்றும் அங்கீகரிக்கப்பட்ட இருவகை வழக்குகள் இருந்தமை இப்பகுதியின் மூலம் புலப்படுகிறது. (………)

(ii) குற்றவாளி எனச் சந்தேகிக்கப்பட்ட ஒருவர்மீது குற்றத்தை ஒப்புக்கொள்ளச்செய்ய மேற்கொள்ளப்பட்ட உடல் உபாதை மிக மோசமானதாக இருந்தது. (………)

(iii) பண்டைய இந்தியாவில் குற்றங்களைக் கட்டுப்படுத்த மூன்று வகையான உத்தியோகத்தர்கள் அமர்த்தப்பட்டனர். (………)

(iv) நகரங்களில் குற்றங்கள் பெருமளவினதாக இருக்கவில்லை. (………)

(v) கிராமங்களிலும் நகரங்களிலும் ஆயுதம் தாங்கிய காவலர்கள் இரவும் பகலும் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். (………)

(vi) அறங்கூறவையம் ஒரு தனி நீதிபதியையன்றிப் பலரைக் கொண்டதாய் இருக்கவேண்டும் என்பது பண்டைய இந்தியாவில் கட்டாயமானதாக இருந்தது. (………)

(vii) சொத்து சம்பந்தமான பாதுகாப்பின்மை காரணமாக ஏற்படும் ஆழமான உணர்வின் அடிப்படையில் உருவானதே இந்தியச் சட்ட முறையாகும். (………)

(viii) பண்டைய இந்தியாவில் மன்றாடுவதைத் தொழிலாகக் கொண்ட சட்ட நிறுவனம் இருக்கவில்லை. (………)

(ix) குற்றஞ்சாட்டப்பட்டவர் குற்றவாளியா இல்லையா என்பதைக் கண்டறியக் கையாளப்படும் இரு உபாயங்கள் இவ்வுரைப்பகுதியின் எழுத்தாளரால் காட்டப்பட்டுள்ளன. (………)

(x) வழக்கொன்று விசாரிக்கப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டபின் சட்ட வல்லுநர்களும் வழக்காடுவோரும் தனிப்பட்ட முறையில் சந்திப்பதற்கு தடையில்லை. (………)

(xi) குடியியல் வழக்குகளில் சான்றுபகரத் தகுதியற்ற ஏழு வகையானவர்களைப் பற்றிய விபரங்கள் இப்பகுதியில் தரப்பட்டுள்ளன. (………)

(xii) சித்திரவதையிலிருந்து ஐந்து வகையினருக்கு விலக்களிக்கப்பட்டிருந்தது. (………)

(xiii) உடல் துன்பத்தை ஏற்படுத்துவன சிலவற்றைச் செய்வது மனித உரிமை மீறலாகும். (………)

(xiv) பண்டைய இந்தியாவில் பொய்க்கரி (பொய்ச்சாட்சி) பேசுவோர் இருந்தமை இப்பகுதியில் உட்கிடையாகக் காணப்படுகிறது. (………)

(xv) சவுக்கடியை மோசமான ஒரு தண்டனையாக இதனை எழுதியவர் கருதவில்லை. (………)

(xvi) சட்டம் பயில்வது பிராமணர்க்கே உரிய ஒரு தொழில் (………)

(xvii) கொள்ளையர் குழுக்களைக் கொல்லும் கொள்ளையர் இருந்தனர் என்பதை உவான் சாங்கு ஆவணங்கள் சுட்டுகின்றன. (………)

(xviii) வழக்குகள் பொதுவாக அரசனால் மட்டுமே விசாரிக்கப்பட்டன. (………)

(xix) அரசவையினால் தீர்க்க வேண்டிய இருவகை வழக்குகள் இருந்தன. (………)

(xx) நீதிபதிகளிடத்து காணப்பட வேண்டிய நான்கு பண்புகள் இவ்வுரைப்பகுதியில் குறிப்பிடப்படுகின்றன. (………)

[பக். 8 ஐப் பார்க்க

37. பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் **சாராம்சத்தை மூன்றில்** ஒரு பகுதியாகச் சுருக்கி எழுதுக. சுருக்கத்துக்குப் பொருத்தமான **தலையங்கம்** இடுக. சுருக்கத்தின் இறுதியில் **சொற்களின் எண்ணிக்கையைக்** குறிப்பிடுக. (15 *புள்ளிகள்*)

கடந்த சில ஆண்டுகளாக, பருவக்காற்று போதுமான மழைவீழ்ச்சியைத் தரத் தவறியதுடன் கிடைத்த மழைவீழ்ச்சியின் பரம்பலும் மிகக் குறுகிய காலத்தில் செறிந்து காணப்பட்டமையானது நாடு முழுவதிலும் கடுமையான வரட்சியையும் அதேபோன்று வெள்ளப்பெருக்கினையும் மண்சரிவுகளையும் ஏற்படுத்தியிருக்கிறது. காலநிலை நிலைமைகளில் ஏற்படும் இம்மாற்றங்களின் விளைவுகள் உணவுப் பொருள்களின் விலைகள், உற்பத்தி, குடிநீர்வழங்கல், நீர்ப்பாசனம் மற்றும் நீர்மின்வலு உருவாக்கம் என்பவற்றின்மீது உணரப்பட்டது. எனவே, நடுத்தர மற்றும் நீண்ட கால நோக்குடன் காலநிலை மாற்றங்களின் மோசமான தாக்கத்தினைத் தணிப்பதற்கு ஆயத்த நிலையிலிருக்கும் செயற்பாடு சார்ந்த கொள்கை வழிமுறைகள் தேவைப்படுகின்றன. வேளாண்மைத் துறையில், நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தும் முறைகள் உயர்த்தப்பட வேண்டியதுடன், வரட்சியைத் தாங்கக் கூடிய உயர் விளைச்சல் தரும் நெல் வர்க்கங்கள் ஊக்குவிக்கப்படுதல் வேண்டும். வேளாண் சமூகத்தினரிடையே அடர்நேர்வினை மாற்றுகின்றதொரு பொறிமுறையாகப் பயிர்க் காப்புறுதித் திட்டங்கள் ஊக்குவிக்கப்படுதல் வேண்டும். மேலும் நியாயமான உறுதியான விலையில் நாடு முழுவதும் ஒரே சீரான உணவு விநியோகத்தினை இயலுமைப்படுத்துவதற்கு, முக்கியமான உணவுத் தானியங்களுக்காக சுழலும் தங்கியிருப்பொன்றினைப் பேணுவது அவசியமாகும். மேலும் பிரதான வலு உருவாக்கத்தின்மீது தங்கியிருப்பதனைக் குறைப்பதற்கு சூரிய வலு முறைமை போன்ற மரபுவழியற்ற புதுப்பிக்கத்தக்க வலு மூலங்களை மேம்படுத்துவதற்கு ஊக்குவிப்புக்கள் அவசியமாக இருக்கும். குடித்தொகையின் வாழ்வாதாரத்தில் தடங்கல்களைக் குறைக்கும் பொருட்டு அரச ஊழியர்கள் மற்றும் பன்னாட்டு அபிவிருத்தி முகவர்களுடனான பிரதேச மட்டத்திலான பங்களிப்புடன் அனர்த்த கண்காணிப்பு மற்றும் முகாமைத்துவப் பொறிமுறைகளை வலுப்படுத்தல் வேண்டும். (சொற்கள் - 144)

தலைப்பு : ..............................................................................

..............................................................................

சொற்களின் எண்ணிக்கை : ..............................

38. கீழ்வரும் விபரங்களை வாசித்து, அதன் உள்ளடக்கத்துக்குப் பொருந்தக்கூடியவாறு விதிக்கப்பட்ட வழிகாட்டலுக்கு இணங்கப் **பகுப்பாய்வு ரீதியான ஒரு திறனாய்வுக் கட்டுரை** எழுதுக. சொற்களின் எண்ணிக்கை **250 - 300** அளவினதாக இருத்தல் வேண்டும். கட்டுரைக்குப் பொருத்தமான ஒரு தலையங்கம் இடுக.
(25 *புள்ளிகள்*)

தொற்று நோய்களின் பரவல் காரணமாக இன்றைய உலக சுகாதாரத்துறை பல்வேறு சவால்களை எதிர்நோக்குகின்றது. இச்சவால்களை வெற்றி கண்டு உலக சமுதாயத்துக்கு நல்லாரோக்கியத்தையும் வளத்தையும் தருவதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அரச மற்றும் தனியார்துறை இரண்டினதும் பங்களிப்பு இன்றியமையாததாகும்.

- தொற்றுநோய்களின் உலகளாவிய பரவல்.
- அதனால் உலக சுகாதாரத்துறை எதிர்நோக்கும் சவால்.
- அச்சவாலை வெற்றிகொள்வதற்கான அரச மற்றும் தனியார் துறைகளின் பங்களிப்பு.
- சவால்களை வெற்றிக்கொள்வதற்கு மேற்கொள்ளத்தக்க உபாயங்கள்.
- சுகாதாரத்துறையிலே தற்போதைய ஆய்வு முடிவுகள்.

தங்களுடைய அபிப்பிராயத்தை நிரூபிக்கச் சரியான காரணங்கள் / உதாரணங்கள் தருக.

(இக்கட்டுரையை மதிப்பிடுமிடத்து, உள்ளடக்கம், மொழியாட்சி, சொற்றொகுதி, கட்டமைப்பு, ஒழுங்கு, முடிவுரை ஆகியவற்றுக்குப் புள்ளிகள் வழங்கப்படும். குறித்த சொற்களின் எண்ணிக்கையினை விட **25 சொற்கள் கூடியோ** அல்லது **குறைந்தோ** காணப்படும் கட்டுரைகளுக்குப் **புள்ளிகள் குறைக்கப்படும்.**

தலைப்பு : ..................................................................................................................................

..................................................................................................................................

..................................................................................................................................

..................................................................................................................................

..................................................................................................................................

..................................................................................................................................

..................................................................................................................................

..................................................................................................................................

..................................................................................................................................

..................................................................................................................................

..................................................................................................................................

..................................................................................................................................

..................................................................................................................................

..................................................................................................................................

..................................................................................................................................

..................................................................................................................................

..................................................................................................................................

..................................................................................................................................

..................................................................................................................................

[பக். 10 ஐப் பார்க்க

[பக். 11 ஐப் பார்க்க

※ ※ ※

*සියලු ම හිමිකම් ඇවිරිණි]*
*முழுப் பதிப்புரிமையுடையது]*
*All Rights Reserved]*

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / **இலங்கை பரீட்சைத் திணைக்களம்** / Department of Examinations, Sri Lanka

# இலங்கை சட்டக் கல்லூரி நுழைவுப் பரீட்சை - 2021
# Sri Lanka Law College Entrance Examination - 2021

**(02)** பொது அறிவும் பொது நுண்ணறிவும்
General Knowledge and General Intelligence


*இரண்டு மணித்தியாலங்கள்*
*Two hours*

## பகுதி I - பொது அறிவு
## Part I - General Knowledge

### பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்

**மிக முக்கியம் :**

விடை எழுதுவதற்கு பென்சிலைப் பயன்படுத்த வேண்டாம்.



※ விடை எழுதும்போது பின்வரும் முறையில் இலக்கங்களை எழுதுமாறு அறிவுறுத்தப்படுகின்றீர்கள்.

**0 1 2 3 4 5 6 7 8 9**

உமது சுட்டெண்ணை இங்கேயும் மூன்றாம் பக்கத்திலுமுள்ள புள்ளிக்கோட்டின்மீது எழுதுக.

....................................

பரீட்சைச் சுட்டெண் சரியானது என உறுதிப்படுத்துகின்றேன்.

....................................
நோக்குநரின் சிற்றொப்பம்

**முக்கியம்**

※ பாட இலக்கம் **(02)** பொது அறிவும் பொது நுண்ணறிவும் வினாத்தாள், **பகுதி I** - பொது அறிவு, **பகுதி II** - பொது நுண்ணறிவு என இரண்டு பகுதிகளைக் கொண்டது.

※ **இவ்விரு பகுதிகளுக்கும்** உரிய நேரம் **இரண்டு மணித்தியாலங்களாகும்.**

※ **பகுதி I** பொது அறிவு வினாத்தாள் **6** பக்கங்களில் **50** வினாக்களைக் கொண்டுள்ளது.

※ **எல்லா** வினாக்களுக்கும் **இத்தாளிலேயே** விடை எழுதுக.

※ **உமக்குத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கேற்ப விடைகளை எழுதுக. அறிவுறுத்தல்களுக்கு அமையாத விடைகளுக்குப் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.**

※ விடை எழுதப்படாவிட்டாலும் இவ்விடைத்தாளை மேற்பார்வையாளரிடம் கையளிக்க வேண்டும்.

※ **பகுதி I, பகுதி II** ஆகிய விடைத்தாள்களை தனித்தனியாக ஒப்படைக்குக.

※ **கறுப்பு** அல்லது **நீல** நிறப் பேனையினால் மாத்திரம் தெளிவாக விடைகளை எழுதுக. **பென்சிலைப் பயன்படுத்த வேண்டாம்.**

※ இவ்வினாத்தாளைப் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லல், அதனை புகைப்படம், நிழற்பிரதி (photocopy) எடுத்தல் என்பன குற்றமாகும்.

※ **தெளிவற்ற இலக்கம், தெளிவற்ற கையெழுத்துகள், அழிக்கும் வெண்மைப் பயன்பாடு, பென்சிலைப் பயன்படுத்தி எழுதப்பட்ட விடைகள் ஆகியவற்றைக் கொண்டுள்ள விடைத்தாள்கள் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்படமாட்டாது.**

**பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்**

| பக்க எண் | வினா எண் | பெற்ற புள்ளிகள் |
|---|---|---|
| 2 | 1 - 9 | |
| 3 | 10 - 16 | |
| 4 | 17 - 26 | |
| 5 | 27 - 38 | |
| 6 | 39 - 50 | |
| மொத்தம் | | |

**இறுதிப் புள்ளிகள்**

| | |
|---|---|
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |

| | | |
|---|---|---|
| விடைத்தாளை | புள்ளியிட்டவர் | |
| | பரீட்சித்தவர் | |
| | | |
| பிரதம பரீட்சகர் | | |

[பக். 2 ஐப் பார்க்க

● **1** தொடக்கம் **30** வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் தரப்பட்டுள்ள நான்கு விடைகளுள் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்து அதற்குரிய **இலக்கத்தை** அவ்வினாவிற்கு எதிரே தரப்பட்டுள்ள **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

**1.** 2019 ஆம் ஆண்டுக்கான இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கையின்படி, 2019 ஆம் ஆண்டில் இலங்கையில் காணப்பட்ட வேலையின்மை வீதம்,
(1) முன்னைய வருடத்தில் காணப்பட்ட 4.4% இல் இருந்து 4.8% ஆக அதிகரித்துள்ளது.
(2) முன்னைய வருடத்தில் காணப்பட்ட 5.8% இல் இருந்து 5.2% ஆக வீழ்ச்சியடைந்துள்ளது.
(3) முன்னைய வருடத்தில் காணப்பட்ட 6.3% இல் இருந்து 7.2% ஆக அதிகரித்துள்ளது.
(4) முன்னைய வருடத்தில் காணப்பட்ட 8.2% இல் இருந்து 7.3% ஆக வீழ்ச்சியடைந்துள்ளது. (………)

**2.** 2019 ஆம் ஆண்டுக்கான இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கையின்படி, 2019 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) இலங்கையின் வெளிநாட்டுக் கடனின் சதவீதம் என்ன?
(1) 40.2% (2) 59.3% (3) 66.6% (4) 72.1% (………)

**3.** இலங்கையில் தற்பொழுது அதிக எண்ணிக்கையிலான இறப்புக்கள் ஏற்படுவதற்குக் காரணமான விடயமாகக் கருதப்படுவது பின்வருவனவற்றுள் எது?
(1) புற்றுநோய் (2) வாகன விபத்துக்கள்
(3) இருதய நோய்கள் (4) தற்கொலைகள் (………)

**4.** புராதன காலத்திலிருந்து இந்நாட்டில் நடைமுறையிலிருந்த 'இராஜகாரிய முறைமை' (பிரபுத்துவ முறைமையின் ஓர் அம்சம்) எந்தச் சீர்திருத்த முன்மொழிவுகள் மூலம் முடிவுறுத்தப்பட்டது?
(1) கோல்புறூக் (2) மக்கலம் (3) டொனமூர் (4) சோல்பரி (………)

**5.** தற்பொழுது நடைமுறையிலுள்ள அரசியலமைப்புக்கான 20 ஆவது திருத்தம் கொண்டுவரப்படும் வரை இலங்கையின் உயர் நீதிமன்றமானது பிரதம நீதியரசரையும் 6 தொடக்கம் 10 வரையான எண்ணிக்கை கொண்ட நீதிபதிகளையும் கொண்டிருந்தது. 20 ஆவது திருத்தத்தின்படி, உயர் நீதிமன்றம் பிரதம நீதியரசரையும் மற்றும் ஏனைய நீதிபதிகளாக எத்தனை பேரைக் கொண்டிருக்கும்?
(1) 5 தொடக்கம் 15 (2) 6 தொடக்கம் 16
(3) 8 தொடக்கம் 17 (4) 10 தொடக்கம் 19 (………)

**6.** இலங்கையின் புராதன குளங்களில், அனுராதபுர காலத்திற்குரிய மிகப் பெரிய குளம் எது?
(1) மின்னேரியாக் குளம் (2) கலா வாவி
(3) யோத வாவி (4) கந்தளாய் குளம் (………)

**7.** இந்நாட்டின் அரசியல் வரலாற்றில் நடைபெற்ற ஒரேயொரு 'பொதுஜன அபிப்பிராய வாக்கெடுப்பு' 1982 இல் இடம்பெற்றது. இப்பொதுஜன அபிப்பிராய வாக்கெடுப்பு பின்வருவனவற்றுள் எதற்காக மேற்கொள்ளப்பட்டது?
(1) அரசியல் அமைப்புக்கான திருத்தத்தினை மேற்கொள்வதற்கு
(2) பாராளுமன்றத்தின் கால எல்லையை நீடிப்பதற்கு
(3) ஜனாதிபதிக்கெதிரான பதவி விலக்கல் குற்றச்சாட்டினை முன்வைப்பதற்கு
(4) பிரதம நீதியரசரைப் பதவியிலிருந்து நீக்குவதற்கு (………)

**8.** மாகாண சபை ஒன்றின் ஆளுநர் நியமிக்கப்படுவது,
(1) ஜனாதிபதியினாலாகும்.
(2) அமைச்சரவையினாலாகும்.
(3) மாகாணசபை உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்குகளினாலாகும்.
(4) மாகாணசபைத் தேர்தலில் பெற்ற பொதுமக்களின் வாக்குகளினாலாகும். (………)

**9.** பின்வருவனவற்றுள் 'பிறநாட்டிடம் ஒப்படைத்தல் சட்டம்' என்னும் பிரிவின் கீழ் நடவடிக்கை எடுக்கக்கூடியது எது?
(1) வெளிநாட்டில் மறைந்திருக்கும் குற்றவாளியொருவரைச் சட்டத்தின் முன் கொண்டுவருதல்
(2) தொழில் செய்யும் இடத்தில் ஏற்படும் பாலியல் துன்புறுத்தல்
(3) வரலாற்றுச் சிதைவுகளைக் கொண்ட சமயத் தலமொன்றில் சட்டரீதியற்ற முறையில் புதையல்களை அகழ்தல்
(4) பாரிய அளவில் கடல் மணலை அகற்றிக் கடல் அரிப்பினை ஏற்படுத்துவதன் மூலம் கரையோரப் பாதுகாப்புச் சட்டங்களை மீறுதல் (………)

[பக். 3 ஐப் பார்க்க

**10.** பின்வருவனவற்றுள் சட்டத்தரணி ஒருவரின் முதன்மையான கடமையாகக் கருதப்படுவது எது?
(1) தமது கட்சிக்காரரை எவ்வழியிலாவது விடுதலை செய்தல்
(2) நீதிமன்றத்துக்கு உதவுதல்
(3) நீதிமன்றத்துக்குள்ளே சட்டம் தொடர்பான தமது தர்க்கிக்கும் ஆற்றலை எடுத்துக்காட்டல்
(4) குற்றவாளி குற்றம் செய்தார் என்பதை உறுதிப்படுத்தல் (.........)

**11.** பின்வருவனவற்றுள் இலங்கை சட்டக் கல்லூரியின் குறிக்கோள் வாசகமான '*Fiat justitia*' என்ற லத்தீன் சொல்லின் எளிமையான கருத்தினைக் குறிப்பிடுவது எது?
(1) சட்டம் என்பது யாவருக்கும் மேலானது.
(2) சட்டம் என்பது நீதியின் பாதுகாவலனாகும்.
(3) நீதி வழங்கப்படட்டும்.
(4) நீதியின் மீதான நம்பிக்கைப் பொறுப்பே சட்டமாகும். (.........)

**12.** நீதிமன்ற முறைமையில் 'பிஸ்கால்கள்' (fiscals)' எனப்படுவோர் ஒரு முக்கியமான பொறுப்பினை ஆற்றுகின்ற குழுவினராவர். இவர்களின் முக்கிய கடமைகளுள் ஒன்று,
(1) நீதிபதிக்கு முன்னால் நின்று அவர் சொல்வதை உயர்ந்த குரலில் விளக்கிக் கூறுவதாகும்.
(2) குற்றம் சாட்டப்பட்டவர், அவர் குற்றவாளியென அறிவிக்கப்பட்டதன் பின்னர் சிறைக் கூண்டுக்குள் அவரைக் கொண்டு சென்று அடைத்தல்
(3) வழக்குக் கோப்புக்கள் முதலியவற்றைக் கொண்டு வந்து கொடுத்து நீதிபதிக்கு உதவுதல்
(4) நீதிபதியின் கட்டளையின் பேரில் சொத்துக்களைப் பறிமுதல் செய்தல் ஆகும். (.........)

**13.** அரசாங்கம் அண்மையில் பாம் (எண்ணெய்) பயிர்ச் செய்கையை இந்நாட்டில் தடை செய்யும் தீர்மானத்தினை மேற்கொண்டது. பாம் பயிர்ச்செய்கையினால் ஏற்படும் **மிகப் பெரிய** பாதிப்பாகக் குறிப்பிடப்படுவது பின்வருவனவற்றுள் எது?
(1) தேயிலை மற்றும் இறப்பர் பயிர்ச்செய்கைகள் எதிர்நோக்கும் அச்சுறுத்தல்கள்
(2) தரைக்கீழ் நீர் வளங்கள் வரண்டு போகும் அச்சுறுத்தல்
(3) மிகக் குறைந்தளவான ஊழியர் மாத்திரம் தேவைப்படுவதனால் கிராமிய வேலையின்மையைக் கடுமையாக ஏற்படுத்தும்.
(4) பாம் எண்ணெயின் பரந்தளவான பயன்பாட்டினால் பொதுமக்களின் சுகாதாரத்துக்குக் கடுமையான அச்சுறுத்தல் ஏற்படும். (.........)

**14.** 1978 இன் பின்னர், இந்நாட்டில் மேல்நிலை நீதிமன்றங்களினால் வழங்கப்பட்ட முக்கியமான தீர்ப்புக்கள் உத்தியோகபூர்வமாக எங்கு பதிவு செய்யப்பட்டுள்ளன?
(1) புதிய சட்ட அறிக்கைகளில் ஆகும்.
(2) வர்த்தமானிகளில் ஆகும்.
(3) இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் வருடாந்த அறிக்கையில் ஆகும்.
(4) இலங்கை சட்ட அறிக்கைகளில் ஆகும். (.........)

**15.** 'Das Kapital' என்ற உலகப் புகழ்பெற்ற நூலின் ஆசிரியர் யார்?
(1) பியடோர் டொஸ்ரோவ்ஸ்கி
(2) லியோன் ட்ரொட்ஸ்கி
(3) கார்ள் மாக்ஸ்
(4) விலாடிமிர் லெனின் (.........)

**16.** பின்வருவனவற்றுள் 'மகவேற்பு வழக்கு (Adoption Case)' ஒன்றில் மேற்கொள்ளக்கூடிய பணிகளுள் ஒன்று எது?
(1) குழந்தையொன்றின் சட்டபூர்வமான பெற்றோரைப் பெற்றுக்கொள்வதற்குத் தொடரப்பட்ட வழக்குகளை விசாரித்தல்
(2) விவாகரத்துப் பெறும் நிலையிலுள்ள திருமணமான தம்பதியினரை ஒன்றிணைப்பதற்கு முயற்சி செய்தல்
(3) திருமண வாக்குறுதியை மீறிய நபர் ஒருவருக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கினை விசாரித்தல்
(4) குழந்தை ஒன்றுக்குத் தாபரிப்புக் கொடுப்பனவைச் செலுத்தாமல் விட்ட நபருக்கு எதிரான வழக்கினை விசாரித்தல் (.........)

[பக். 4 ஐப் பார்க்க

**17.** பின்வருவனவற்றில் இலங்கையில் நடைமுறையிலிருக்கும் பொதுத் திருமணச் சட்டங்களின் கீழ், விவாகரத்து வழக்கொன்றினைப் பதிவு செய்வதற்கான அடிப்படை எதனையும் **கொண்டிராதது** எது?
(1) சோரம் (Adultery)
(2) திருமணத்திற்கு முன்னர் காணப்பட்ட குணப்படுத்த முடியாத பாலியல் குறைபாடு
(3) கணவன், மனைவி ஆகிய இருவரதும் கருத்துக்கள் பொருந்தாமை காரணமாக இருவரது விருப்பத்தின் பேரிலும் திருமணத்தை முறித்தல்
(4) தீய நோக்குடைய கைவிடல் (………)

**18.** 2024 கோடை கால ஒலிம்பிக் போட்டிகள் பின்வரும் எந்த நகரத்தில் நடைபெற உள்ளது?
(1) பாரிஸ் (2) ஏதென்ஸ் (3) பெய்ஜிங் (4) சியோல் (………)

**19.** மருத்துவரினால் வழங்கப்பட்ட சிகிச்சையில் ஏற்பட்ட கவனக் குறைபாடு காரணமாக நோயாளி ஒருவர் பார்வையற்றவர் ஆகின்றார். மருத்துவரின் மருத்துவக் கவனக்குறைபாடு (medical negligence) காரணமாக ஏற்பட்ட இந்நிலைமைக்கு எதிராக வழக்கு தொடர்வதற்கு அதனுடன் தொடர்புபட்ட சட்டப் பிரிவு எது?
(1) நிர்வாகச் சட்டம் (2) தீங்கியல் சட்டம்
(3) ஒப்பந்தச் சட்டம் (4) புலமைச் சொத்துச் சட்டம் (………)

**20.** இந்நாட்டின் நிதியியல் நிறுவகங்களின் பண வைப்பாளர்களைப் பாதுகாப்பதற்காக ‘இலங்கை பண வைப்பாளர் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித் திட்டம்’ என்பதனை அறிமுகம் செய்து செயற்படுத்தி வரும் நிறுவகம் பின்வருவனவற்றுள் எது?
(1) நிதி அமைச்சு (2) ஜனாதிபதி செயலகம்
(3) இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் (4) இலங்கை மத்திய வங்கி (………)

**21.** சீனாவின் தொடர்பாடல் கட்டுமானக் கம்பனியினால் (China Communication Construction Company) இலங்கையில் பாரிய முதலீட்டில் மேற்கொள்ளப்பட்ட / மேற்கொண்டு வருகின்ற கட்டுமானச் செயற்றிட்டம் பின்வருவனவற்றுள் எது?
(1) ஹம்பாந்தோட்டை துறைமுகம் (2) தெற்கு அதிவேகப் பாதை
(3) கொழும்புத் துறைமுக நகரம் (4) மத்தல விமான நிலையம் (………)

**22.** அண்மையில் ஐக்கிய இராச்சியத்திலிருந்து (UK) அனுப்பப்பட்ட பெருமளவு கப்பல் கொள்கலன்கள் அந்நாட்டுக்கே மீண்டும் திருப்பி அனுப்பப்பட்டது. அக்கொள்கலன்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது யாது?
(1) பயன்படுத்தப்பட்ட கணினிகள்
(2) காலாவதியான உணவு வகைகள்
(3) மதுபானங்களை உற்பத்தி செய்வதற்குத் தேவையான மூலப்பொருட்கள்
(4) கழிவுப் பொருட்கள் (………)

**23.** தற்பொழுது இந்நாட்டில் இயங்கிக் கொண்டிருக்கும் நுரைச்சோலை அனல்மின் நிலையம் எந்த நாட்டின் உதவியுடன் நிர்மாணிக்கப்பட்டது?
(1) இந்தியா (2) சீனா
(3) யப்பான் (4) ஐக்கிய இராச்சியம் (………)

**24.** இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையின் தற்போதைய தலைவர் யார்?
(1) திரு. எஸ். ஆர். ஆட்டிகல (2) கலாநிதி. பி. பி. ஜயசுந்தர
(3) பேராசிரியர். டபிள்யூ, டி. லக்ஸ்மன் (4) கலாநிதி. இந்திரஜித் குமாரசுவாமி (………)

**25.** பின்வருவனவற்றுள் மீன்பிடிக் கைத்தொழிலுக்குப் புகழ்பெற்ற இடமாக இருந்தபோதும், மீன்பிடித் துறைமுகம் (Fishery harbour) **கட்டப்படாத** இடம் எது?
(1) வாழைச்சேனை (2) கிரிந்த (3) நீர்கொழும்பு (4) பாணந்துறை (………)

**26.** இந்நாட்டில் உருவாக்கப்பட்ட முதலாவது கூட்டுறவுச் சங்கம் பின்வருவனவற்றுள் எது?
(1) சந்தலங்காவ கூட்டுறவுச் சங்கம்
(2) தும்பறைப் பள்ளத்தாக்கு கூட்டுறவுச் சங்கம்
(3) ஹிங்குராங்கொட கூட்டுறவுச் சங்கம்
(4) அம்பலாங்கொட - பலப்பிட்டிய கூட்டுறவுச் சங்கம் (………)

[பக். 5 ஐப் பார்க்க

**27.** பின்வருவனவற்றுள் இலங்கையில், முற்று முழுதாக உள்ளூரில் தயாரிக்கப்பட்ட முதல் திரைப்படம்
(1) கம்பெரலிய (2) ரன்முத்துதுவ (3) சத்சமுதுர (4) ரேக்காவ (.........)

**28.** பின்வருவோருள் 'ரேமன் மக்ஸ்சேசே' (Roman Magsaysay) சர்வதேச விருது **வழங்கப்படாத** இலங்கையர் யார்?
(1) நந்தா மாலினி (2) பண்டிட் டபிள்யூ. டி. அமரதேவா
(3) அருட்தந்தை மார்சலின் ஜயக்கொடி (4) கெத்சி சண்முகம் (.........)

**29.** இரண்டாம் உலக மகா யுத்தம் முடிவடைந்த பின்னர் 1945 இல் சர்வதேச நாணய நிதியம் (IMF) ஸ்தாபிக்கப்பட்டது,
(1) பிரேட்டன் வூட்ஸ் மகாநாட்டின் மூலமாகும்.
(2) ஜெனிவா சமவாயத்தின் மூலமாகும்.
(3) வார்சோ சமவாயத்தின் மூலமாகும்.
(4) ஐக்கிய நாடுகளின் உத்தியோகபூர்வ அறிவிப்பின் மூலமாகும். (.........)

**30.** பின்வருவனவற்றில் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் பாதுகாப்புக் கவுன்சிலில் நிரந்தர அங்கத்துவத்தைக் **கொண்டிராத** நாடு எது?
(1) சீனா (2) பிரான்ஸ் (3) இந்தியா (4) ரஷ்யா (.........)

● **31** தொடக்கம் **50** வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் உரிய சரியான விடையைப் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

**31.** 'கொவிட் -19' வைரசுக்கு எதிராக இலங்கையில் முதலாவதாகப் பெற்றுக்கொடுக்கப்பட்ட தடுப்பூசியின் பெயர் என்ன?

----------------------------------------

**32.** 'பார்கின்சன்' நோயானது மனிதனின் எந்த உடற்றொகுதியுடன் சம்பந்தப்பட்டது?

----------------------------------------

**33.** தற்போது நிர்மாணிக்கப்பட்டு வரும் மத்திய அதிவேகப் பாதையின் கண்டி விரிவாக்கம் (தற்போது இருப்பது போன்று) இறுதியாக எந்த இடத்தில் முடிவடையும் எனத் திட்டமிடப்பட்டுள்ளது?

----------------------------------------

**34.** ஐக்கிய அமெரிக்கக் குடியரசில் நடைபெற்ற கடந்த ஜனாதிபதி தேர்தலில் புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட உப ஜனாதிபதி யார்?

----------------------------------------

**35.** மரணசாதன வழக்குகளை விசாரிப்பதற்கான நியாயாதிக்கத்தினைக் கொண்டிருக்கும் நீதிமன்றம் எது?

----------------------------------------

**36.** தற்போதைய பாராளுமன்றத்தில் 'பொது நிறுவனங்கள் பற்றிய குழு' (COPE) வின் தலைவர் யார்?

----------------------------------------

**37.** நபர் ஒருவர் சொத்து ஒன்றிற்கான ஆட்சியுரிமையைக் கோருவதற்கு, அந்நபர் தடையின்றித் தொடர்ச்சியான முறையில் ஆகக் குறைந்தது எவ்வளவு காலத்துக்குச் சொத்தினைத் தன்வசம் வைத்திருக்க வேண்டும்?

----------------------------------------

**38.** மரணசாதன வழக்கொன்றைத் தொடர்வதற்கு நபர் ஒருவர் தனது இறப்புக் காலத்தில் வைத்திருக்கக் கூடிய அசையும் மற்றும் அசையாச் சொத்துக்களின் ஆகக் குறைந்த பெறுமானம் யாது?

----------------------------------------

[பக். 6 ஐப் பார்க்க

**39.** பிரித்தானியர் ஆட்சியின் கீழ் இந்நாட்டில் ஸ்தாபிக்கப்பட்ட மிகப் பழமையான அரசாங்கத் திணைக்களம் எது?

---------------------------------------------------------------------------------------------------

**40.** மருத்துவர்கள் தமது உயர்தொழில் நெறிமுறைகளைப் பின்பற்றுவதற்கு வழங்கும் சத்தியப் பிரமாணத்தின் பெயர் யாது?

---------------------------------------------------------------------------------------------------

**41.** மத்திய அதிவேகப் பாதையை அமைக்கும் பொழுது இலங்கையின் உள்ளூர்ச் சூழலுக்குரியதும் அழிவுறும் நிலையிலுள்ளதுமான மரமொன்றினை அகற்றுவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சி தொடர்பாகக் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. அத்தாவரத்தின் விஞ்ஞானப் பெயர் யாது?

---------------------------------------------------------------------------------------------------

**42.** சீமெந்து, கற்கள், மணல், உருக்குக் கம்பிகள் என்பவற்றுக்கு மேலதிகமாக கொங்கிரீற்றுக் கலவைக்குத் தேவையான மற்றொரு அடிப்படைக் கூறு எது?

---------------------------------------------------------------------------------------------------

**43.** இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்திற்கு புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் யார்?

---------------------------------------------------------------------------------------------------

**44.** தற்பொழுது இலங்கையில் பிரதான கிரிக்கட் பயிற்சியாளராகத் தொழிற்படுபவர் யார்?

---------------------------------------------------------------------------------------------------

**45.** காலநிலை மாற்றம் பற்றிய சர்வதேச இயக்கத்தினை ஆரம்பித்த சுவீடன் நாட்டுப் பெண்ணின் பெயர் என்ன?

---------------------------------------------------------------------------------------------------

**46.** ஐக்கிய அமெரிக்கக் குடியரசில் (USA) அண்மையில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற ஜோ பைடன் பிரதிநிதித்துவப்படுத்திய அரசியல் கட்சி யாது?

---------------------------------------------------------------------------------------------------

**47.** கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணைத் தொகுத்து வெளியிடும் திணைக்களம் எது?

---------------------------------------------------------------------------------------------------

**48.** நீதிமன்றில் வாதாடப்படும் 'முன்பிணை' (Anticipatory Bail) என்பதனால் நீர் விளங்கிக்கொள்வது யாது?

---------------------------------------------------------------------------------------------------

**49.** தற்போதைய சட்டங்களின்படி உள்ளூராட்சிமன்றத் தேர்தலொன்றில் ஏதேனும் உள்ளூராட்சி மன்றமொன்றில் கட்டாயமாக இருக்க வேண்டிய ஆகக்குறைந்த பெண்கள் பிரதிநிதித்துவத்தின் சதவீதம் எவ்வளவு?

---------------------------------------------------------------------------------------------------

**50.** 2020 ஆம் ஆண்டில் இரசாயனத்துக்கான நோபல் பரிசு இரண்டு நபர்களுக்கு வழங்கப்பட்டது. அவர்களில் ஒருவர் ஜெனிபர் ஏ. டவுட்னா (Jennifer A. Doudna) என்னும் ஓர் அமெரிக்கர். மற்றைய இணை வெற்றியாளரான பிரான்ஸ் நாட்டவரின் பெயர் யாது?

---------------------------------------------------------------------------------------------------

* *

இந்தப் பக்கத்தை வினாப்பத்திரத்தில் இருந்து கிழித்து வேறாக்குவதோ பரீட்சை மண்டபத்துக்கு வெளியே எடுத்துச் செல்வதோ முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.

செய்கைவழிக்காக மட்டும்

DOE

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / **இலங்கை பரீட்சைத் திணைக்களம்** / Department of Examinations, Sri Lanka

# இலங்கை சட்டக் கல்லூரி நுழைவுப் பரீட்சை - 2021
# Sri Lanka Law College Entrance Examination - 2021

## (02) பொது அறிவும் பொது நுண்ணறிவும்
## General Knowledge and General Intelligence


*இரண்டு மணித்தியாலங்கள்*
*Two hours*

### பகுதி II - பொது நுண்ணறிவு
### Part II - General Intelligence

## பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்

**மிக முக்கியம் :**

விடை எழுதுவதற்கு பென்சிலைப் பயன்படுத்த வேண்டாம்.



※ விடை எழுதும்போது பின்வரும் முறையில் இலக்கங்களை எழுதுமாறு அறிவுறுத்தப்படுகின்றீர்கள்.

**0 1 2 3 4 5 6 7 8 9**

உமது சுட்டெண்ணை இங்கேயும் மூன்றாம் பக்கத்திலுமுள்ள புள்ளிக்கோட்டின்மீது எழுதுக.

....................................

பரீட்சைச் சுட்டெண் சரியானது என உறுதிப்படுத்துகின்றேன்.

....................................

நோக்குநரின் சிற்றொப்பம்

**முக்கியம்**

※ பாட இலக்கம் **(02)** பொது அறிவும் பொது நுண்ணறிவும் வினாத்தாள், **பகுதி I** - பொது அறிவு, **பகுதி II** - பொது நுண்ணறிவு என இரண்டு பகுதிகளைக் கொண்டது.

※ **இரு பகுதிகளுக்கும்** உரிய காலம் **இரண்டு மணித்தியாலங்கள்** ஆகும்.

※ **பகுதி II** பொது நுண்ணறிவு வினாத்தாள் **9** பக்கங்களில் **50** வினாக்களைக் கொண்டுள்ளது.

※ **எல்லா** வினாக்களுக்கும் **இத்தாளிலேயே** விடை எழுதுக.

※ **கணிப்பான் பயன்படுத்துவதற்கு அனுமதியில்லை.**

※ **பகுதி I, பகுதி II** ஆகிய விடைத்தாள்களை தனித்தனியாக மேற்பார்வையாளரிடம் ஒப்படைக்குக.

※ **உமக்குத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கேற்ப விடைகளை எழுதுக. அறிவுறுத்தல்களுக்கு அமையாத விடைகளுக்குப் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.**

※ விடை எழுதப்படாவிட்டாலும் இவ்விடைத்தாளை மேற்பார்வையாளரிடம் கையளிக்க வேண்டும்.

※ **கறுப்பு** அல்லது **நீல** நிறப் பேனையினால் மாத்திரம் தெளிவாக விடைகளை எழுதுக. **பென்சிலைப் பயன்படுத்த வேண்டாம்.**

※ இவ்வினாத்தாளைப் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லல், அதனை புகைப்படம், நிழற்பிரதி (photocopy) எடுத்தல் என்பன குற்றமாகும்.

※ **தெளிவற்ற இலக்கம், தெளிவற்ற கையெழுத்துகள், அழிக்கும் வெண்மைப் பயன்பாடு, பென்சிலைப் பயன்படுத்தி எழுதப்பட்ட விடைகள் ஆகியவற்றைக் கொண்டுள்ள விடைத்தாள்கள் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்படமாட்டாது.**

**பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்**

| பக்க எண் | வினா எண் | பெற்ற புள்ளிகள் |
|---|---|---|
| 2 | 1 - 8 | |
| 3 | 9 - 15 | |
| 4 | 16 - 25 | |
| 5 | 26 - 31 | |
| 6 | 32 - 37 | |
| 7 | 38 - 45 | |
| 8 | 46 - 48 | |
| 9 | 49 - 50 | |
| மொத்தம் | | |

**இறுதிப் புள்ளிகள்**

| | |
|---|---|
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |

| | | |
|---|---|---|
| விடைத்தாளை | புள்ளியிட்டவர் | |
| | பரீட்சித்தவர் | |
| | | |
| பிரதம பரீட்சகர் | | |

[பக். 2 ஐப் பார்க்க

● இல. **1** இலிருந்து **5** வரையான ஒவ்வொரு வினாவின் ஆரம்பத்திலும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய மூன்று சொற்கள் தரப்பட்டுள்ளன. கீழே தரப்பட்டுள்ள தெரிவுகளிலிருந்து **அதே ஒத்த தொடர்புடைய** தெரிவை தேர்ந்தெடுத்து அதன் **இலக்கத்தை** அவ்வினாவிற்கு எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

**1.** விதை : கன்று : மரம்
(1) கரு : குழந்தை : வயதுவந்தவர் (2) மகன் : அப்பா : பாட்டன்
(3) பனிக்கட்டி : நீர் : நீராவி (4) இறந்தகாலம் : நிகழ்காலம் : எதிர்காலம் (.........)

**2.** நல்லது : கெட்டது : சிறந்தது
(1) ஈரமான : உலர்ந்த : குளிரான
(2) நியூட்ரான் : எலெக்ரோன் : புரோட்டான்
(3) மேல் : கீழ் : உயரம்
(4) பலமானது : பலவீனமானது : சக்தி வாய்ந்தது (.........)

**3.** விலை : நிரம்பல் : கேள்வி
(1) மழை : வெள்ளம் : நீர் (2) கொள்ளளவு : கனவளவு : வெளி
(3) வினைத்திறன் : உற்பத்தித்திறன் : விரயம் (4) வேகம் : தூரம் : நேரம் (.........)

**4.** வைத்தியர் : நோயாளி : சிகிச்சை
(1) ஆசிரியர் : மாணவன் : பாடத்திட்டம் (2) நுகர்வோர் : வியாபாரி : பரிவர்த்தனை
(3) நீதிபதி : சட்டத்தரணி : தீர்ப்பு (4) தலைவர் : பின்பற்றுபவர் : வழிப்படுத்தல் (.........)

**5.** தையற்காரர் : துணி : உடை
(1) தச்சன் : மரம் : தளபாடம் (2) முடிதிருத்துபவன் : கத்தரி : தலைமயிர்
(3) விவசாயி : நிலம் : அறுவடை (4) இசைக்கலைஞர் : பாடல்வரிகள் : பாடல் (.........)

● இல. **6** இலிருந்து **15** வரையான ஒவ்வொரு வினாவிற்கும் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்து, அதன் **இலக்கத்தை** அவ்வினாவிற்கு எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

**6.** ஒரு குறிப்பிட்ட இலக்கம் 13 இனால் வகுக்கப்படும்போது மீதி 11 ஆகும். அதே இலக்கம் 17 இனால் வகுக்கப்படும்போது மீதி 16 ஆகும். பின்வருவனவற்றுள் அந்த இலக்கம் எது?
(1) 37 (2) 50 (3) 63 (4) 67 (.........)

**7.** மணிக்கு 80 கிலோமீற்றர் எனும் வேகத்தில் பயணிக்கும் ஒரு கடுகதிப் புகையிரதம், புகையிரத நிலைய மேடையில் நிற்கும் ஒரு மனிதனை 9 செக்கன்களில் கடக்கின்றது. அந்தப் புகையிரதத்தின் நீளம் மீற்றர்களில் எவ்வளவு?
(1) 120 (2) 160 (3) 200 (4) 240 (.........)

**8.** குறித்த ஒரு நாள், ஒரு பாடசாலையில், முதலாம் பாடவேளை முடிவில் வகுப்பு $A$ இலிருந்த 10 மாணவர்கள் வகுப்பு $B$ இற்கு சென்றதனால் இரண்டு வகுப்புக்களிலும் இருந்த மாணவர்களின் தொகை சமமாகியது. இரண்டாம் பாடவேளை முடிவில், வகுப்பு $B$ இலிருந்த 20 மாணவர்கள் வகுப்பு $A$ இற்கு சென்றபோது, வகுப்பு $A$ இலிருந்த மாணவர்களின் எண்ணிக்கையானது வகுப்பு $B$ இலிருந்த மாணவர்களின் எண்ணிக்கையின் இரண்டு மடங்காக ஆனது. முதலாம் பாடவேளையில் வகுப்பு $A$ இல் எத்தனை மாணவர்கள் இருந்தனர்?
(1) 60 (2) 70 (3) 80 (4) 90 (.........)

**செய்கைவழிக்காக**

[பக். 3 ஐப் பார்க்க

**9.** ஒரு தொழிற்சாலையில் இரண்டு இயந்திரங்கள் இருக்கின்றன. ஒன்று புதியது மற்றயது பழையது. ஒரு பணியைச் செய்து முடிக்க புதிய இயந்திரம் 30 மணித்தியாலங்கள் எடுக்கும் அதே வேளை அதே பணியைச் செய்து முடிக்க பழைய இயந்திரம் 60 மணித்தியாலங்கள் எடுக்கின்றது. அப்பணியை விரைவுப்படுத்துவதற்காக, தொழிற்சாலையின் முகாமையாளர் இரண்டு இயந்திரங்களையும் ஒன்றாக ஒரே நேரத்தில் இயக்குகின்றார். 10 மணித்தியாலங்களில் பணியின் எத்தனை சதவீதம் முடிவடைந்திருக்கும்?

(1) 40% (2) 50% (3) 55% (4) 60% (.........)

**10.** ஏதாவது இரண்டு முழு எண்களுக்கு, குறியீடு ⊖ ஆனது முதலாவது இலக்கத்திலிருந்து இரண்டாவது இலக்கத்தை கழிக்கும் செயற்பாட்டைக் குறிக்கின்றது. அத்துடன் குறியீடு ⊗ ஆனது இரண்டு இலக்கங்களின் பெருக்கத்தின் இரு மடங்கைப் பெறும் செயற்பாட்டைக் குறிக்கின்றது. $1 \ominus [(-2) \otimes 3]$ இனது பெறுமானம் யாது?

(1) –13 (2) –11 (3) 11 (4) 13 (.........)

**11.** நிஷிகா பிறக்கும்போது அவளது தந்தையின் வயது 29 வருடங்களாக இருந்ததுடன் அவளுக்கு மூன்று வயது இளையவரான அவளது இளைய சகோதரர் பிறக்கும்போது அவளது தாயின் வயது 31 வருடங்களாக இருந்தது. நிஷிக்காவின் பெற்றோரது வயதுகளின் வித்தியாசம் வருடங்களில் எத்தனை?

(1) 0 (2) 1 (3) 2 (4) 3 (.........)

**12.** திருமதி. பெரேரா வருடத்திற்கு 3.5% எளிய வட்டியினை செலுத்தும் சேமிப்புக் கணக்கொன்றில் ரூ. 500 000 இனை வைப்பிலிட்டார். அவருக்கு ரூ. 35 000 இனை வட்டியாகப் பெறுவதற்கு எத்தனை வருடங்கள் பிடிக்கும்?

(1) 2 (2) 3 (3) 4 (4) 5 (.........)

**13.** ஒரு இளமாணிப் படிப்பிலுள்ள ஒரு மாணவர் குழுவில், மூன்றில் ஒரு பங்கினர் வயது 19 வருடங்களை விட குறைந்தவர்கள். வயது 19 வருடங்களை விட கூடியவர்களின் எண்ணிக்கையானது வயது 19 வருடங்களையுடைய 50 மாணவர்களின் எண்ணிக்கையின் 20% ஆக இருக்கின்றது. அந்தக் குழுவிலுள்ள மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?

(1) 80 (2) 90 (3) 100 (4) 120 (.........)

**14.** ஒரு குடும்பத்திலுள்ள 9 உடன்பிறப்புக்களில், மூத்தவரின் வயது 28 வருடங்களும் இளையவரின் வயது 3 வருடங்களும் ஆகும். மற்றைய 7 உடன் பிறப்புக்களினதும் வயதுகளின் சராசரியானது எல்லா உடன்பிறப்புகளினதும் வயதுகளின் சராசரியை விட ஒரு வயது குறைவாகும். உடன்பிறப்புகள் 9 பேரினதும் வயதுகளின் சராசரியானது வருடங்களில் எவ்வளவு?

(1) 9 (2) 11 (3) 12 (4) 14 (.........)

**15.** பொதுத் தேர்தலொன்றின்போது ஒரு வாக்களிப்பு நிலையத்தில் $W, X, Y, Z$ ஆகிய நான்கு கட்சிகள் முறையே 8 : 6 : 3 : 1 என்ற விகிதத்தில் வாக்குகளைப் பெற்றன. கட்சி $X$ ஆனது கட்சி $Z$ இனை விட 20 000 வாக்குகள் அதிகமாகப் பெற்றது எனின், கட்சி $W$ பெற்றுக்கொண்ட வாக்குகள் எத்தனை?

(1) 24 000 (2) 28 000 (3) 30 000 (4) 32 000 (.........)

செய்கைவழிக்காக

[பக். 4 ஐப் பார்க்க

- இல. **16** இலிருந்து **20** வரையான ஒவ்வொரு வினாவிலும் ஒரு குறிப்பிட்ட கூற்றும் அதன்கீழ் **I** மற்றும் **II** என பெறுமானங்கள் இரண்டு வீதம் தரப்பட்டுள்ளன. தரப்பட்ட கூற்றுகளின் அடிப்படையில் இரண்டு பெறுமானங்களையும் ஒப்பிட்டு,

  **I** இல் உள்ள பெறுமானம் **II** இல் உள்ள பெறுமானத்தை விட அதிகம் எனில் $A$ எனவும்
  **II** இல் உள்ள பெறுமானம் **I** இல் உள்ள பெறுமானத்தை விட அதிகம் எனில் $B$ எனவும்
  **I** மற்றும் **II** இல் உள்ள பெறுமானங்கள் சமம் எனில் $C$ எனவும்
  அதிகமான பெறுமானத்தை தீர்மானிக்க முடியாது எனில் $D$ எனவும்

  ஒவ்வொரு வினாவிற்கும் எதிரே உள்ள **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

**16.** ஹசன் என்பவர் மணிக்கு 5 கிலோமீற்றர் என்ற மாறாத வேகத்தில் நடக்கின்றார்.
**I** - ஹசன் 80 நிமிடங்களில் நடந்த தூரம்
**II** - 6.5 கிலோமீற்றர்கள் (………)

**17.** கடந்த மாதத்தில் ஒரு வீட்டின் மாதாந்த மின்பாவனை 160 அலகுகள் ஆகும். இந்த மாதத்தில் அந்த வீட்டின் மின்பாவனை 15% அதிகரித்தது.
**I** - இந்த மாதத்தின் மாதாந்த மின்பாவனை அலகுகளில்
**II** - 184 (………)

**18.** ஒரு குறிப்பிட்ட நூல்நிலையத்தில், புனைகதைப் புத்தகங்களின் எண்ணிக்கைக்கும் புனைகதை அற்ற புத்தகங்களின் எண்ணிக்கைக்கும் இடையிலான விகிதம் 6 : 5 ஆகும். அந்த நூல் நிலையத்திலுள்ள புனைகதைப் புத்தகங்களினதும் புனைகதை அற்ற புத்தகங்களினதும் மொத்த எண்ணிக்கை 5 500 ஆகும்.
**I** - புனைகதைப் புத்தகங்களின் எண்ணிக்கை
**II** - 2 500 (………)

**19.** $x$ ஆனது $y$ இனது இரண்டு மடங்கு. $z$ ஆனது $x$ இனது மூன்றில் ஒன்று. $x + y + z = 77$
**I** - $z$
**II** - 14 (………)

**20.** $n$ என்பது $4n > 45$ இனையும் $3n < 42$ இனையும் திருப்திப்படுத்தும் ஒரு எண் ஆகும்.
**I** - $n$
**II** - 12 (………)

- இல. **21** இலிருந்து **25** வரையான ஒவ்வொரு வினாவிலும் ஒரு எழுத்து / எண் கோலமொன்று அமைக்கப்பட்டுள்ளது.

  அந்த கோலத்தை அவதானித்து, எழுத்து / எண் கோலத்தில் **?** இனால் குறிப்பிடப்பட்டுள்ள இடைவெளியை நிரப்பக்கூடிய மிகப் பொருத்தமான தெரிவை, தரப்பட்ட தெரிவுகளிலிருந்து தேர்ந்தெடுத்து, அத்தெரிவின் **இலக்கத்தை** அவ்வினாவிற்கு எதிரே உள்ள **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

**21.** JQR, KST, LUV, ……?……, NYZ
(1) MWX (2) MUW (3) MVW (4) MNX (………)

**22.** $C_3OVID$, $CO_5VID$, ……?……, $COVI_9D$, $COVID_{11}$
(1) $CO_7VID$ (2) $COV_6ID$ (3) $COV_7ID$ (4) $COV_8ID$ (………)

**23.** DYEZF, GYHZI, ……?……, MYNZO, PYQZR, SYTZU
(1) IYJZK (2) JKYZL (3) JYKLZ (4) JYKZL (………)

**24.** Q9PO, ……?……, K7JI, H6GF, E5DC
(1) N8ML (2) N8LM (3) M8NL (4) NM8L (………)

**25.** $Z_2U$, $YV_4$, $X_6W$, $WX_8$, $V_{10}Y$, ……?……
(1) $UZ_{12}$ (2) $UZ_{11}$ (3) $U_{12}Z$ (4) $VZ_{12}$ (………)

**செய்கைவழிக்காக**

● இல. **26** இலிருந்து **30** வரையான வினாக்கள் கீழ்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டவை.

தரப்பட்ட இந்த குறுக்குக் கோட்டுச் சட்டத்தில் நிரைகளுக்கும் நிரல்களுக்கும் இடையே 3 × 3 சிறு கட்டங்களால் ஆன 9 "சதுரங்கள்" உள்ளன. குறுக்குக் கோட்டுச் சட்டத்திலுள்ள ஒவ்வொரு நிரையும் நிரலும் சதுரமும் 1 தொடக்கம் 9 வரையான இலக்கங்களைக் கொண்டு நிரப்பப்பட வேண்டும். ஒவ்வொரு இலக்கமும் ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் சதுரத்திலும் ஒரு தடவை மாத்திரம் இடம்பெற வேண்டும்.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | | | 6 | | 9 | 8 | | |
| | | 5 | *C* | | 3 | | 6 | |
| *A* | | 8 | 4 | | 2 | | 1 | |
| | | | | 1 | | 3 | 8 | |
| 5 | | | | 2 | *D* | | | 7 |
| | 8 | 2 | | 6 | | | | |
| | 6 | | 5 | | 1 | 4 | *E* | |
| | 7 | | 2 | | | 5 | | |
| | *B* | 9 | 8 | | 7 | | | 6 |

மேலுள்ள தகவல்களின்படி ஒவ்வொரு வினாவிற்குமான சரியான விடையைக் கொண்டுள்ள தெரிவை தேர்ந்தெடுத்து அதன் **இலக்கத்தை** அவ்வினாவிற்கு எதிரே உள்ள **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

**26.** *A* குறித்து நிற்கும் இலக்கம் யாது?
(1) 3 (2) 6 (3) 7 (4) 9 (.........)

**27.** *B* குறித்து நிற்கும் இலக்கம் யாது?
(1) 2 (2) 3 (3) 4 (4) 5 (.........)

**28.** *C* குறித்து நிற்கும் இலக்கம் யாது?
(1) 1 (2) 5 (3) 7 (4) 8 (.........)

**29.** *D* குறித்து நிற்கும் இலக்கம் யாது?
(1) 4 (2) 7 (3) 8 (4) 9 (.........)

**30.** *E* குறித்து நிற்கும் இலக்கம் யாது?
(1) 2 (2) 5 (3) 7 (4) 9 (.........)

● இல. **31** இலிருந்து **35** வரையான வினாக்கள் கீழ்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டவை.

*P*, *Q*, *R*, *S* மற்றும் *T* என்ற ஐந்து ஊழியர்கள் கொழும்பில் அமைந்துள்ள ஒரு அரசாங்க அலுவலகத்தில் தாபனங்கள், ஓய்வூதியம், நிதி, கணக்காய்வு மற்றும் தகவல் தொழில்நுட்பம் எனும் கிளைகளில் தரப்பட்ட வரிசையின்படியின்றி வேலை செய்கின்றனர். அவர்கள் தற்பொழுது கொழும்பின் புறநகர்ப் பகுதிகளில் தங்கியிருப்பதுடன் அவர்கள் வேலைக்கு வருவதற்கான அவர்களது நாளாந்த போக்குவரத்து முறையானது கார், வான், பேருந்து, புகையிரதம் மற்றும் மோட்டார் சைக்கிள் ஆகும். இதுவும் தரப்பட்ட வரிசையொழுங்கில் இல்லை. ஒவ்வொரு ஊழியரும் ஒரேயொரு போக்குவரத்து முறையை மட்டும் பயன்படுத்துகின்றனர்.

❋ தாபனங்கள் கிளையில் வேலை செய்பவர் வருவது மோட்டார் சைக்கிளில் இல்லை.
❋ தகவல் தொழில்நுட்பக் கிளையில் வேலை செய்பவர் வருவது புகையிரதத்தில் இல்லை.
❋ *R* ஆனவர் மோட்டார் சைக்கிளில் வருகின்றார்.
❋ *S* ஆனவர் தகவல் தொழில்நுட்பக் கிளையில் வேலை செய்கின்றார்.
❋ தாபனங்கள் கிளையில் வேலை செய்பவர் காரில் வேலைக்கு வரும் அதேவேளை புகையிரதத்தில் வேலைக்கு வருபவர் கணக்காய்வுக் கிளையில் வேலை செய்கின்றார்.
❋ நிதிக் கிளையில் வேலை செய்பவரான *P* என்பவர் வேலைக்கு வானில் வருகின்றார்.
❋ *T* ஆனவர் கணக்காய்வுக் கிளையில் வேலை செய்யவில்லை.

அதன்படி ஒவ்வொரு வினாவிற்குமான சரியான விடையைத் தெரிவுசெய்து அதன் **இலக்கத்தை** அவ்வினாவிற்கு எதிரே உள்ள **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

**31.** *Q* மற்றும் *R* ஆகியோர் வேலை செய்வது முறையே,
(1) கணக்காய்வு மற்றும் ஓய்வூதியக் கிளைகளிலாகும்.
(2) ஓய்வூதிய மற்றும் கணக்காய்வுக் கிளைகளிலாகும்.
(3) ஓய்வூதிய மற்றும் தாபனங்கள் கிளைகளிலாகும்.
(4) கணக்காய்வு மற்றும் தாபனங்கள் கிளைகளிலாகும். (.........)

[பக். 6 ஐப் பார்க்க

**32.** $Q$ சம்பந்தமான சரியானக் கூற்று எது?
(1) ஓய்வூதியக் கிளையில் வேலை செய்பவரான $Q$ புகையிரதத்தில் வேலைக்கு வருகின்றார்.
(2) தாபனங்கள் கிளையில் வேலை செய்பவரான $Q$ புகையிரதத்தில் வேலைக்கு வருகின்றார்.
(3) கணக்காய்வுக் கிளையில் வேலை செய்பவரான $Q$ புகையிரதத்தில் வேலைக்கு வருகின்றார்.
(4) கணக்காய்வுக் கிளையில் வேலை செய்பவரான $Q$ பேரூந்தில் வேலைக்கு வருகின்றார். (………)

**33.** $T$ சம்பந்தமான சரியானக் கூற்று எது?
(1) தாபனங்கள் கிளையில் வேலை செய்பவரான $T$ புகையிரதத்தில் வேலைக்கு வருகின்றார்.
(2) ஓய்வூதியக் கிளையில் வேலை செய்பவரான $T$ காரில் வேலைக்கு வருகின்றார்.
(3) கணக்காய்வுக் கிளையில் வேலை செய்பவரான $T$ காரில் வேலைக்கு வருகின்றார்.
(4) தாபனங்கள் கிளையில் வேலை செய்பவரான $T$ காரில் வேலைக்கு வருகின்றார். (………)

**34.** $R$ மற்றும் $T$ ஆகியோர் வேலை செய்வது முறையே,
(1) ஓய்வூதிய மற்றும் கணக்காய்வுக் கிளைகளிலாகும்.
(2) ஓய்வூதிய மற்றும் தாபனங்கள் கிளைகளிலாகும்.
(3) தாபனங்கள் மற்றும் கணக்காய்வுக் கிளைகளிலாகும்.
(4) கணக்காய்வு மற்றும் தாபனங்கள் கிளைகளிலாகும். (………)

**35.** கீழ்வருவனவற்றுள் சரியானக் கூற்று எது?
(1) $Q$ ஆனவர் புகையிரதத்திலும் $T$ ஆனவர் பேருந்திலும் வேலைக்கு வருகின்றனர்.
(2) $Q$ ஆனவர் காரிலும் $T$ ஆனவர் புகையிரதத்திலும் வேலைக்கு வருகின்றனர்.
(3) $Q$ ஆனவர் புகையிரதத்திலும் $T$ ஆனவர் காரிலும் வேலைக்கு வருகின்றனர்.
(4) $Q$ ஆனவர் பேருந்திலும் $T$ ஆனவர் காரிலும் வேலைக்கு வருகின்றனர். (………)

● இல. **36** இலிருந்து **40** வரையான வினாக்கள் கீழ்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டவை.

- ❋ $P$, $Q$, $R$, $S$ மற்றும் $T$ என்ற ஐந்து அங்கத்தவர்களைக் கொண்ட ஒரு குடும்பம் அதே வரிசையில் இல்லாதவாறு தந்தை, தாய், மூத்த மகன், மகள், இளைய மகன் ஆகியோரைக் கொண்டுள்ளது.
- ❋ அவர்களில் $P$, $R$ மற்றும் மகள் ஆகிய மூவரும் கோப்பிப் பானத்தை விட தேனீரை விரும்புகின்றனர்.
- ❋ அவர்களில் $Q$ மற்றும் தாய் ஆகிய இருவரும் தேனீரை விட கோப்பிப் பானத்தை விரும்புகின்றனர்.
- ❋ இளைய மகன், $S$ மற்றும் $P$ ஆகிய மூன்று உறுப்பினர்களில் இருவர் தேனீரை விட கோப்பிப் பானத்தை விரும்புகின்றனர்.
- ❋ மூத்த மகனும் $R$ உம் ஒன்றாக கிரிக்கெட் போட்டிகளை பார்க்க விரும்புகின்றனர்.

அதன்படி ஒவ்வொரு வினாவிற்குமான சரியான விடையைத் தெரிவுசெய்து அதன் **இலக்கத்தை** அவ்வினாவிற்கு எதிரே உள்ள **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

**36.** மூத்த மகன் யார்?
(1) $P$ (2) $Q$ (3) $R$ (4) $S$ (………)

**37.** இளைய மகன் யார்?
(1) $P$ (2) $Q$ (3) $R$ (4) $S$ (………)

**செய்கைவழிக்காக**

**38.** தாய் யார்?
(1) *Q* (2) *R* (3) *S* (4) *T* (………)

**39.** தந்தை யார்?
(1) *Q* (2) *R* (3) *S* (4) *T* (………)

**40.** கீழ்வருவனவற்றில் சரியான கூற்று யாது?
(1) தந்தை கோப்பிப் பானத்தை விட தேனீரை விரும்புகின்றார்.
(2) மூத்த மகன் தேனீரை விட கோப்பிப் பானத்தை விரும்புகின்றார்.
(3) தந்தை தேனீரை விட கோப்பிப் பானத்தை விரும்புகின்றார்.
(4) இளைய மகன் கிரிக்கெட் போட்டிகளை பார்க்க விரும்புகின்றார். (………)

● இல. **41** இலிருந்து **45** வரையான வினாக்கள் கீழ்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டவை.

அமல், விமல், சிறில் மற்றும் தயாள் ஆகிய நால்வரும் இலங்கை சட்டக் கல்லூரியின் நுழைவுப் பரீட்சைக்கு தோற்றவிருக்கும் நான்கு பரீட்சார்த்திகள் ஆவர். அவர்கள் க.பொ.த (உ/த) பரீட்சையில் அதே மூன்று பாட சேர்க்கைகளான பொருளியல், புவியியல் மற்றும் வரலாறு ஆகிய பாடங்களுக்கு தோற்றியிருக்கின்றார்கள். அவர்கள் நால்வரும் க.பொ.த (சா/த) பரீட்சையின் ஆங்கிலப் பாடத்திலும் சித்தியடைந்திருக்கின்றார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் A, B, C, மற்றும் S என்ற தரங்களை மேலே சொல்லப்பட்ட **நான்கு** பாடங்களிலும் பெற்றிருக்கின்றனர்.

* அமல் பொருளியலில் A தரத்தையும் சா/த ஆங்கிலத்தில் C தரத்தையும் பெற்றுள்ளார்.
* விமல் வரலாற்றில் A தரத்தையும் சா/த ஆங்கிலத்தில் B தரத்தையும் பெற்றுள்ளார்.
* சிறில் வரலாற்றில் C தரத்தையும் பொருளியலில் B தரத்தையும் பெற்றுள்ளார்.
* தயாள் வரலாற்றில் S தரத்தை பெற்றுள்ளார்.
* ஒவ்வொரு பரீட்சார்த்தியும் 1A தரம், 1B தரம், 1C தரம் மற்றும் 1S தரம் பெற்றுள்ளனர்.
* ஒவ்வொரு பாடமும் 1A தரம், 1B தரம், 1C தரம் மற்றும் 1S தரம் சித்திகளைக் கொண்டுள்ளன.

அதன்படி மேலுள்ள ஒவ்வொரு வினாவிற்குமான சரியான விடையைத் தெரிவுசெய்து அதன் **இலக்கத்தை** அவ்வினாவிற்கு எதிரே உள்ள **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

**41.** க.பொ.த (சா/த) ஆங்கிலத்தில் A தரநிலை சித்தியைப் பெற்றுள்ளவர் யார்?
(1) அமல் (2) விமல் (3) சிறில் (4) தயாள் (………)

**42.** புவியியலில் S தரநிலை சித்தியைப் பெற்றுள்ளவர் யார்?
(1) அமல் (2) விமல் (3) சிறில் (4) தயாள் (………)

**43.** பொருளியலில் C தரநிலை சித்தியைப் பெற்றுள்ளவர் யார்?
(1) அமல் (2) விமல் (3) சிறில் (4) தயாள் (………)


**44.** பின்வருவனவற்றுள் எதை சிறில் பெற்றுள்ளார்?
(1) புவியியலில் A (2) புவியியலில் B
(3) பொருளியலில் C (4) பொருளியலில் S (………)


**45.** பின்வருவனவற்றுள் எதை விமல் பெற்றுள்ளார்?
(1) புவியியலில் S (2) புவியியலில் B
(3) பொருளியலில் S (4) பொருளியலில் B (………)


**செய்கைவழிக்காக**


● இல. **46** இலிருந்து **50** வரையான ஒவ்வொரு வினாவிற்குமான **சரியான** விடையைத் தெரிவுசெய்து அதன் இலக்கத்தை அவ்வினாவிற்கு எதிரே உள்ள **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.


**46.** கீழே தரப்பட்ட உருவத்தின் கண்ணாடி விம்பப் படத்தைக் காட்டும் தெரிவு யாது?




(1)



(2)



(3)



(4)


(.........)


**47.** கீழே தரப்பட்ட உருவத்தின் சுழற்சியைக் காட்டும் தெரிவு யாது?




(1)



(2)



(3)



(4)


(.........)


**48.** கீழே தரப்பட்ட உருவத்தின் சுழற்சியைக் காட்டும் தெரிவு யாது?




(1)



(2)



(3)



(4)


(.........)


**49.** கீழே தரப்பட்ட உருவத்தின் சுழற்சியைக் காட்டும் தெரிவு யாது?




(1)



(2)



(3)



(4)


(………)


**50.** கீழே தரப்பட்டுள்ள வலையமைப்பிலிருந்து தயாரிக்கக்கூடிய கனசதுரத்தைக் காட்டும் தெரிவு யாது?




(1)


(2)


(3)


(4)

(………)

❊ ❊ ❊

இந்தப் பக்கத்தை வினாப்பத்திரத்தில் இருந்து கிழித்து வேறாக்குவதோ பரீட்சை மண்டபத்துக்கு வெளியே எடுத்துச் செல்வதோ முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.

**செய்கைவழிக்காக மட்டும்**

DOE